# சவால்களை எதிர்கொண்டு மீண்டெழுவதற்கான இணைந்த கலைகளின் அரங்கச் செயல்வாதம்
(கறுவாக்கேணி கிராமத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

Eastern University, Sri Lanka
Academic Affairs Department
2 8 MAR 2017
Vantharumoolai
Chenkalady

திரு.துரைராஜா கௌரீஸ்வரன்
EU/PGS/2011/M.Phil(DT)/03

LIBRARY
24 NOV 2017
EASTERN UNIVERSITY, SRI LANKA

M.phil08
Thesis
Library - EUSL

நுண்கலைத்துறை
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்
இலங்கை
வந்தாறுமூலை
2016

PROCESSED
Main Library, EUSL

# பொருளடக்கம்

பக்கங்கள்

நன்றியுரை

ஆய்வுச் சுருக்கம்

**ஆய்வு அறிமுகம்.......................................................... 01 - 06**

**அத்தியாயம் ஒன்று....................................................... 07 - 25**

சவால்களை எதிர்கொள்ளலும் மீண்டெழுதலும் - ஓர் அறிமுகம்

**அத்தியாயம் இரண்டு...................................................... 26 - 49**

செயல்வாத அரங்குகளும் இணைந்த கலைகளின் பயன்படுத்துகையும்

2.1 கல்வியியல் அரங்கச் செயற்பாடுகளும் இணைந்த கலைகளின் வகிபங்கும் :

2.2 பெண்ணிலைவாத அரங்கச் செயற்பாடுகளும் இணைந்த கலைகளின் வகிபாகமும்

2.3 கூத்து மீளுருவாக்கத்திற்கான பங்குகொள் ஆய்வுச் செயற்பாடும் இணைந்த கலைகளின் பயன்பாடும் :

**அத்தியாயம் மூன்று........................................................ 50 -89**

**இணைந்த கலைகள் எனும் எண்ணக்கருவின் உருவாக்கமும் அதன் பிரயோகமும்**

3.1 அறிமுகம் -

3.2 கல்வி முறையின் குறைபாடுகளும் இணைந்த கலைகளின் அரங்கச் செயல்வாதத்தின் தேவையும்

3.3 இன்றைய ஊடகப் பண்பாட்டின் பின்புலமும் இணைந்த கலைகளின் அரங்கச் செயல்வாதத்தின் தேவையும்

3.4 நுகர்வுப் புண்பாட்டின் உருவாக்கமும் இணைந்த கலைகளின் அரங்கச் செயல்வாதத்தின் தேவையும் -

3.5 இணைந்த கலைகளைப் பிரயோகத்திற்குக் கொண்டுவரும் அரங்கச் செயல்வாதம்

3.5.1 சிறுவர் விளையாட்டுக்களையும், அரங்க விளையாட்டுக்களையும் பிரயோகத்திற்குக் கொண்டு வருதல

3.5.2 இசைக்கேற்ப அசைதல்

3.5.3 பாரம்பரியமான நிகழ்த்து கலைகளின் அடிப்படை ஆட்ட முறைகளைப் பயிற்றுவித்தல்

3.5.4 போலச் செய்தலும் புதிதளித்தலும்

3.5.5 சிறுவர்களுக்கான பாடலாக்கச் செயற்பாடு

3.5.6 வண்ணங்களைப் பயன்படுத்துதல்

3.5.7 கையகப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தி கலையாக்கம் செய்தல்

3.5.8 கைகளில் விளையும் சூழலின் அழகு

3.5.9 பட்டம் கட்டுதலும் அதைப் பறக்க விடுதலும்

3.5.10 சிறுவர்களுக்கான நாடகங்களின் உருவாக்கம்

3.5.11 கதை சொல்லிகளும் கதைகள் கேட்டலும்

3.5.12 எழுத்தாக்கங்களை ஊக்குவித்தல்

3.5.13 சிறுவர் திருவிழாக்களை நடத்துதல

3.6 ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னரான நிலைமைகளில் இக்கலைச் செயற்பாட்டின் தாக்கம்

**அத்தியாயம் நான்கு………………………………………………………… 90 - 118**

சிறுவர் இல்லங்களில் வாழும் சிறுவர்களும் - இணைந்த கலைகளின் அரங்கச் செயல்வாதத்தின் அவசியமும்

4.1 அறிமுகம்

4.2 சிறுவர் இல்லங்களின் தோற்றத்திற்குக் காரணமான சமூகப் பின்னணி

4.3 சிறுவர் இல்லங்களின் உருவாக்கத்தில் தாக்கஞ்செலுத்திய காரணிகள்

4.4 சிறுவர் இல்லங்களும் அவற்றில் வாழும் சிறுவர்களின் வாழ்க்கை முறைகளும்

4.5 சிறுவர் இல்லங்களில் இணைந்த கலைகளின் அரங்கச் செயல்வாதத்தின் தேவை

**அத்தியாயம் ஐந்து………………………………………………………… 119 - 139**

சிறுவர் இல்லங்களில் வாழ்ந்த சிறுவர்களுடனான இணைந்த கலைகளின் அரங்கச் செயல்வாதம்

5.1 அறிமுகம்

5.2 பெருவிழாவை எதிர்பார்த்துக் கலையாக்கங்களில் ஈடுபடுதல்

5.3 பட்டம் கட்டுதலும் ஏற்றி மகிழ்தலும்

5.4 ‘விரும்பி’ உருவங்களின் உருவாக்கம்

5.5 கூடி வாழ் முன்றலின் உருவாக்கம்

5.6 ‘முளை’ எனும் சிறுவர்களுக்கான சஞ்சிகை

5.7 கறுவாக்கேணி கிராமமும் இணைந்த கலைகளின் அரங்கச் செயல்வாதமும்

**முடிவுரை……………………………………………………… 140 - 141**

**உசாத்துணைநூல் பட்டியல்…………………………………… 142 - 143**

**பின்னிணைப்புக்கள்…………………………………………….. 144 - 152**

## ஆய்வுச் சுருக்கம்

உலக அரங்க வரலாற்றில் மனித சமூகங்கள் இடர்களையும் சவால்களையும் எதிர்கொண்ட சந்தர்ப்பங்களில் எல்லாம் அரங்கக் கலைகள் அத்தகைய இடர்களிலிருந்தும் சவால்களிலிருந்தும் மனிர்கள் விடுதலை பெற்று முன்னேறிச் செல்வதற்கான உந்து சக்தியை ஊட்டி வந்துள்ளமை வரலாறாக இருந்து வருகின்றது.

சவால்களை எதிர்கொள்ளும் போது அரங்கின் வகிபாகமும் புதிய புதிய செல்நெறிகளுடன் பரிணாமம் பெற்று வந்துள்ளது. இந்த வகையில் ஈழத்தமிழர்களின் அரங்க வரலாற்றில் கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலான அசாதாரண வாழ்வியல் அனுபவங்களினூடாக உருவான சவால்களை எதிர்கொள்வதற்கான வழிமுறைகளுள் ஒன்றாக அரங்கச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இதன் காரணமாக ஈழத்தமிழ் அரங்கு உலக அரங்கிற்குப் புதிய அனுபவங்களையும், எண்ணக்கருக்களையும், கருத்தியல்களையும் வழங்கி நிற்கின்றது.

இந்த வரிசையில் ஈழத்தமிழ் சூழலில் சவால்களை எதிர்கொண்டு மீண்டெழுவதற்கான அரங்கச் செயற்பாடுகளுள் ஒன்றாக இணைந்த கலைகளின் அரங்கச் செயல்வாதம் எனும் நடைமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளமையினை அடையாளங் காண முடிகின்றது. இந்த இணைந்த கலைகளின் அரங்கச் செயல்வாதம் எனும் நடைமுறையை கருதுகோளாகக் கொண்டு ஆய்வாளரின் ஒரு தசாப்த காலத்திற்கும் மேலான அரங்கச் செயற்பாட்டு அனுபவங்களை முதனிலைத் தரவுகளாகவும் இதையொத்த அரங்கச் செயற்பாட்டு அனுபவங்களை இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.